# Geography – G.C.E. A/L

Past Paper Class

**S.AKSHAYAN**

**B.A.(Hons) Special in Geography,**

**MA in Geography, PGDE**

**0772054540**

ALLPPT.com _ Free PowerPoint Templates, Diagrams and Charts

# Past Paper Class – Practical Geography

## புள்ளி விபரவியல் - விளக்கப்படங்கள்

- பார் வரைபடம்
- கோட்டு வரைபடம்
- வட்ட வரைபடம்

# Past Paper 2019

5. 2009 மற்றும் 2012 இல் இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு, கைத்தொழில் துறையினால் மேற்கொள்ளப்பட்ட பங்களிப்பானது **அட்டவணை 1** இல் காட்டப்பட்டுள்ளது.


**அட்டவணை 1 :** 2009 மற்றும் 2012 இல் இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் கைத்தொழில் துறையின் பங்களிப்பு (மில்லியன் ரூபா)

| | கைத்தொழில்துறை | 2009 | 2012 |
|---|---|---|---|
| 1 | சுரங்கமறுத்தலும் கல்லுடைத்தலும் | 60 079 | 84 672 |
| 2 | தயாரிப்பு | 458 660 | 520 938 |
| 3 | மின்வலு, எரிவாயு மற்றும் நீர் | 63 567 | 72 634 |
| 4 | கட்டடவாக்கம் | 177 912 | 247 091 |

**மூலம்** : தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம், இலங்கை. (2012)

(i) 2012 இல் இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் கைத்தொழில் துறையின் பங்களிப்பினை எடுத்துக்காட்டுவதற்கு பிரிக்கப்பட்ட வட்டவரைபு (pie graph) ஒன்றினை வரைக. (இதற்காக தனியானதொரு வரைபுத்தாளைப் பெற்றுக்கொள்க.) (05 புள்ளிகள்)

agaram.lk




| கைத்தொழில் துறை | 2012 | $360^0$ | % |
|---|---|---|---|
| தயாரிப்பு | 520938 | 202 | 56 |
| கட்டடவாக்கம் | 247091 | 97 | 27 |
| சுரக்க மறுத்தலும் கல்லுடைத்தலும் | 84672 | 32 | 9 |
| மின்வலு, எரிவாயு மற்றும் நீர் | 72634 | 29 | 8 |
| | 925335 | 360 | 100 |

**புள்ளித்திட்டம்**

| | |
|---|---|
| கடிகாரம் போன்று வலது பக்கமாக பிரித்தல் | 01 |
| கூடியதிலிருந்து குறைந்ததிற்கு | 01 |
| கணிப்பீடு | 1.5 |
| தலையங்கம் | 0.5 |
| மூலம் | 0.5 |
| குறியீட்டு விளக்கம் | 0.5 |
| மொத்தம் | 5.0 |

(ii) நீர் வரைந்த வரைபின் நன்மைகள் **இரண்டினையும்** தீமைகள் **இரண்டினையும்** விவரிக்குக. (4 × 1 = 4 புள்ளிகள்)

**நன்மைகள்**

- சேர்கையில் காணப்படும் எந்தவொரு மாறுதன்மையையும் எடுத்துக்காட்டுவதற்கு இந்த வரைபு முறை பொருத்தமானது.
- வட்டத்தில் காட்டப்படும் பாகைகளுக்கு ஏற்ப பரிமாணத்தின் உப பிரிவுகளை இனங்காண முடியும்.
- பெருமளவான தரவு களைச் சுருக்கமாக மாற்றி இம்முறையின் ஊடாக எடுத்துக்காட்ட முடியும்.

**தீமைகள்**

- பரந்த வீச்சுக்கொண்டதரவுகளை எடுத்துக்காட்டுவதற்கு இம்முறை பொருத்தமானதாகக் காணப்பட்டாலும், சிறிய எண்ணிக்கைக் கொண்ட தரவுகளை எடுத்துக்காட்டுவதற்குப் பொருத்தமற்றது.
- வரைபினை உருவாக்குவது கடினம்.
- ஒருமுறை ஒரு மாறியையே எடுத்துக் காட்டமுடியும்.
- பெறுமானங்கள் பற்றிய பொதுவான கருத்தினையே இது எடுத்துக்காட்டும். உண்மையான மதிப்பீடாக இருக்க மாட்டாது.

(iii) **அட்டவணை 1** இல் தரப்பட்டுள்ள தரவுகளைப் பயன்படுத்தி, இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு கைத்தொழில் துறையின் பங்களிப்பில் காணப்படும் **இரண்டு** முனைப்பான அம்சங்களைச் சுருக்கமாக விவரிக்குக.

- 2009 மற்றும் 2012 ஆகிய ஆண்டுகளை ஒப்பிடும் போது கைத்தொழில் துறை மிக உயர்ந்ததளவான பங்களிப்பைச் செய்துள்ளது. இது 11.5% வளர்ச்சியைக் காட்டுகின்றது. (62298)
- கட்டடவாக்கம் இரண்டாம் நிலையிலுள்ளது. 2009 - 2012 காலத்தில் வளர்ச்சியானது 28% ஆகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. (64179)
- சுரங்க மறுத்தல் மற்றும் கல்லுடைத்தல் துறையின் பொதுவான பங்களிப்பு குறைவாகக் காணப்பட்டாலும் 2009 - 2012 காலத்தில் உயர்வான வளர்ச்சி வீதத்தினைக் (29 %) கொண்டிருந்தது. (24593)
- மின்வலு, எரிவாயு மற்றும் நீர் என்பதன் பங்களிப்புக் குறைவாக இருந்தது. 2012 இல் வளர்ச்சி வீதம் 12.4% (9067) ஆகக் காணப்பட்டது.

(iv) **அட்டவணை 1** இல் தரப்பட்டுள்ள தரவுகளை எடுத்துக்காட்டுவதற்குப் பயன்படுத்தக்கூடிய வேறொரு படவரைகலையியல் முறையினை முன்வைத்து அதன் பொருத்தப்பாட்டிற்கான காரணங்கள் **இரண்டினைக்** குறிப்பிட்டு விளக்குக. (2 × 1.5 = 3 புள்ளிகள்)

**பல் சலாகை வரைபுகள்** (Multi bar graphs)

- பல்வேறு வகையைச் சேர்ந்த தரவுகளை ஒப்பீட்டு ரீதியாக எடுத்துக் காட்டுவதற்கு முடியும்.
- காலம் மற்றும் மாறியைப் பொறுத்து உப பிரிவுகளுக்கு இடையிலான வேறுபாட்டினை எடுத்துக் காட்டுவதற்கு முடியும்.
- பிரிவுகளுக்கு உள்ளேயும், பிரிவுகளிடையேயும் பல்வகைத் தன்மையை ஒப்பீட்டுப் பார்ப்பதற்கு முடியும்.
- பல்வேறு மாறிகளில் தற்போது காணப்படும் மாற்றங்களை ஒரு வரைபின் மூலம் எடுத்துக் காட்ட முடியும்.

**இணைந்த பார் வரைபுகள்** (Combined bar graphs)

- மாறியின் மொத்தப் பெறுமதியையும், உப பிரிவுகளையும் எடுத்துக் காட்ட முடியும்.
- உப பிரிவுகளுக்கு நிறங்களைப் பயன்படுத்துவதன் மூலம் உப பிரிவுகளில் காணப்படும் குறைபாடுகளைத் தெளிவாக இனங்காண முடியும்.
- உப பிரிவுகளுக்கிடையிலான ஒப்பீட்டு ரீதியான வேறுபாட்டினை சதவீதத்தில் காட்டுவதன் மூலம் இலகுவாக விளங்கிக் கொள்ள முடியும்.
- மொத்தப் பெறுமானத்தையும் சேர்க்கையின் வேறுபாட்டினையும் எடுத்துக் காட்டுவதற்கும் பார்களினை உருவாக்க முடியும்.

# Past Paper 2020

5. **அட்டவணை 1** இல் தெரிவுசெய்யப்பட்ட ஆசிய நாடுகளில், 2017 ஆம் ஆண்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் (GDP) துறைசார் சேர்க்கை காட்டப்பட்டுள்ளது.


**அட்டவணை 1 :** தெரிவுசெய்யப்பட்ட ஆசிய நாடுகளில் துறை மூலமான மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) - 2017 (மில்லியன் யு. எஸ் டொலர்)

| நாடு | விவசாயம் | கைத்தொழில் | சேவைகள் |
|---|---|---|---|
| சீனா | 1 833 590 | 9 400 050 | 11 976 360 |
| இந்தியா | 1 458 996 | 2 179 020 | 5 826 510 |
| யப்பான் | 59 874 | 1 638 343 | 3 739 341 |
| தென் கொரியா | 4 477 | 799 755 | 1 186 405 |
| தாய்லாந்து | 101 352 | 447 432 | 687 216 |


மூலம்: http://data.worldbank.org

(i) **அட்டவணை 1** இல் தரப்பட்டுள்ள தரவுகளை முன்வைப்பதற்கு பல்பார் (சலாகை) வரைபொன்றினை வரைக. (இதனை வரைவதற்குத் தனியான வரைபுத்தாள் ஒன்றினைக் கேட்டுப்பெறவும்.)

**(08 புள்ளிகள்)**




| | |
|---|---|
| தலையங்கம் | - 1.0 புள்ளி |
| மூலம் | - 0.5 புள்ளி |
| குறியீட்டு விளக்கம் | - 1.0 புள்ளி |
| குத்து அளவுத்திட்டம் | - 1.0 புள்ளி |
| கிடை அளவுத்திட்டம் | - 1.0 புள்ளி |
| வரைதல் | - 4.0 புள்ளி |
| மொத்தம் | - 8.0 புள்ளிகள் |




(ii) நீர் வரைந்த வரைபினைப் பயன்படுத்தி, தெரிவுசெய்யப்பட்ட ஆசிய நாடுகளின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் காணப்படும் முனைப்பான அம்சங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

**(2 x 1 = 02 புள்ளிகள்)**

- எல்லா நாடுகளிலும் விவசாயத் துறையின் பங்களிப்பு குறைவாகக் காணப்படுகிறது.
- எல்லா நாடுகளிலும் சேவைத்துறையின் பங்களிப்பு மிக உயர்வாக இருக்கின்றது.
- சீனாவில் விவசாயத்துறையை விட கைத்தொழில் மற்றும் சேவைத்துறை மிக உயர்வாக உள்ளது.
- இந்தியாவில் விவசாயம் மற்றும் கைத்தொழில் துறைகளுக்கு இடையிலான இடைவெளி பெரிதாகக் காணப்படவில்லை
- தென் கொரியா மற்றும் தாய்வானில் எல்லாத் துறைகளுக்கும் இடையில் ஒரே வகையான தன்மையை இனங்காண முடிகின்றது.
- ஒவ்வொரு நாடுகளிலும் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் (GDP) துறைசார் சேர்க்கையில் ஒரே வகையான தன்மை காணப்படுகின்றது.
- சீனாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் (GRP) பெறுமானத்தினை ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் போது பொதுவாக மிக உயர்வாகக் காணப்படுகின்றது.

(iii) **அட்டவணை 1** இல் தரப்பட்டுள்ள தரவுகளை முன்வைப்பதற்குப் பொருத்தமான இன்னொரு வரைபு முறையினைப் பெயரிட்டு, புனையா வரைபடங்களின் உதவியுடன் அதனை விவரிக்குக.

| | |
|---|---|
| **பெயரிடுதல்** | **- 01 புள்ளி** |
| **பொருத்தப்பாடு** | **- 02 புள்ளிகள்** |
| **புனையாவரைபட விவரணம்** | **- 02 புள்ளிகள்** |
| **மொத்தம்** | **- 05 புள்ளிகள்** |

**வரைபடத்தின் விவரம்**

(i) **கூட்டு பார் வரைபு / கூட்டு நிரல் வரைபு**


(ii) **சில்லு விளக்க வரைபு** (Pie graph)


**பொருத்தப்பாடு**

- பல்வேறு நாடுகளினதும், துறைகளினதும் தரவுகளை ஒரே வரைபில் எடுத்துக் காட்டக் கூடியதாக இருக்கும்.
- தனியொரு பாரில் மொத்தப் பெறுமானத்தையும் வெளிப்படுத்த முடியும்
- தரவுச் சேர்க்கைகளை பாரில் பல்வேறு பகுதிகளாக சேர்த்துக் காட்ட முடியும்
- இலகுவாக வரைய முடியும்
- பார் வரைபடத்தின் உயரத்தில் இருந்து எல்லாப் பெறுமானங்களையும் விளங்கிக் கொள்ள முடியும்.
- நாடுகளின் அடிப்படையில் அவற்றின் மொத்தப் பெறுமானங்களை ஒப்பிட்டுப் பார்க்க முடியும்.

**புனையா வரைபடம் / வரைதல்**

- குத்தான அச்சுக்குப் (Y) பொருத்தமான அளவுத்திட்டத்தினைத் தீர்மானித்தல்
- பொருத்தமான முறையைப் (X) பயன்படுத்திக் கிடையான அச்சினை உருவாக்குதல்.
- கிடையான அச்சின் நீளத்தினையும் பாரின் அகலத்தினையும் தீர்மானித்தல்.
- பார்களை (சலாகைகள்) உருவாக்குதல்.
- பாரில் உப பிரிவுகளை மிகத் தெளிவாக முன்வைத்தல்.



# Past paper 2021

6. அட்டவணை 2 இல் தரப்பட்டிருக்கும் தரவுகளைப் பயன்படுத்திப் பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

**அட்டவணை 2 :** வயதுப் பிரிவு மற்றும் பால் அடிப்படையில் மதிப்பிடப்பட்ட இலங்கையின் நடு - ஆண்டுக் குடித்தொகை - 2019 (ஆயிரத்தில்)

| வயதுப் பிரிவு | ஆண் | பெண் | மொத்த குடித்தொகை |
|---|---|---|---|
| 0 - 9 | 1 889 | 1 856 | 3 745 |
| 10 - 19 | 1 374 | 1 754 | 3 128 |
| 20 - 29 | 1 591 | 1 714 | 3 305 |
| 30 - 39 | 1 588 | 1 676 | 3 264 |
| 40 - 49 | 1 370 | 1 462 | 2 832 |
| 50 - 59 | 1 158 | 1 286 | 2 444 |
| 60 -69 | 758 | 899 | 1 657 |
| >70 | 424 | 610 | 1 034 |


மூலம்: பதிவாளர் நாயகத் திணைக்களம், இலங்கை 2020.

(i) அட்டவணை 2 இல் உள்ள தரவுகளைப் பயன்படுத்தி 2019 ஆம் ஆண்டில் இலங்கைக் குடித்தொகையின் வயது மற்றும் பால் கட்டமைப்பை எடுத்துக்காட்டுவதற்கான கூம்பக வரைபு (Pyramid graph) ஒன்றினை வரைக. (08 புள்ளிகள்)

(iii) கூம்பக வரைபு என்பது படவரைகலையியலின் ஒரு நுட்பமுறை என்ற வகையில் அதன் மூன்று நன்மைகளை விளக்குக.

**(3 x 01 = 03 புள்ளிகள்)**

- நாட்டின் குடித்தொகைக் கட்டமைப்பை முன்வைப்பதற்கான திறனைக் கொண்டுள்ளது.
- குடித்தொகை உறுதியாகக் காணப்படுகின்றதா, வீழ்ச்சியடைந்து அல்லது விரிவடைந்து செல்லும் போக்கினைக் கொண்டு காணப்படுகின்றதா என்பதனை இனங்காண முடியும்.
- வயதுப் பிரமிட்டிலிருந்து குடித்தொகையின் எதிர்காலப் போக்குகளை எதிர்வு கூற முடியும்.
- தொழிற்படையுடன் தொடர்பாக, தங்கியிருப்போரின் எண்ணிக்கையை இனங்காணும் திறனைக் கொண்டுள்ளது.
- நாடொன்றின் எதிர்கால அபிவிருத்தியைப் பாதிக்கும் பிரச்சினைகளை விளங்கிக் கொள்வதற்கான திறனைக் கொண்டுள்ளது.
- தனியொரு வரைபில் இத்தகைய தரவுகளைக் காட்சிப்படுத்தக்கூடிய வேறு வரைபு முறைகள் எதுவும் காணப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.




தலைப்பு - 0.5 புள்ளி
மூலம் - 0.5 புள்ளி
X அச்சு - 1.0 புள்ளி
Y அச்சு - 1.0 புள்ளி
பார் விபரம் - 4.0 புள்ளி
நிறம் - 1.0 புள்ளி
மொத்தம் - 8.0 புள்ளிகள்

(ii) உம்மால் மேலே 6 (i) இல் வரையப்பட்ட வரைபிலிருந்து அவதானிக்கக்கூடிய இலங்கையின் வயது மற்றும் பால் குடித்தொகையில் காணப்படும் முனைப்பான அம்சங்கள் நான்கினை ஆராய்க.

**(4 x 01 = 04 புள்ளிகள்)**

- விருத்தியடைந்து வரும் நாடுகளின் வயதுக் கூம்பகம் போலவே இக் கூம்பகத்தின் வடிவமும் நகர்ந்து செல்கிறது.
- பெண்களின் குடித்தொகை, சார்பளவில் வயதுப் பிரிவு 0 - 9 என்பதைத் தவிர்த்துப் பார்க்கும்போது ஆண்களின் குடித்தொகையை விட அதிகமாகக் காணப்படுகின்றது.
- பெண்களின் குடித்தொகையில் வயதுப் பிரிவுக்கேற்ப படிப்படியான வீழ்ச்சி காணப்படுகின்றது
- 10 -19 வயதுப் பிரிவில் ஆண்களின் வயதுப் பிரிவில் குறிப்பிடத்தக்க சுருக்கம் காணப்படுகின்றது.
- 70 க்கும் அதற்கு மேலும் உள்ள குடித்தொகையின் வயதுப் பிரிவில் பெண்களின் குடித்தொகை உயர்வாகக் காணப்படுகின்றது.
- வயது வந்தோருக்கான குடித்தொகையில் ஆண் மற்றும் பெண் வயதுப் பிரிவுகளில் பெரிதும் வேறுபாடு காணப்படவில்லை.
- தொழிற்படையானது தங்கியிருப்போருடன் ஒப்பிடுமிடத்து உயர்வாகக் காணப்படுவதை அவதானிக்க முடிகின்றது.

Department of Examinations - Sri Lanka

# Past Paper 2022

6. அட்டவணை 2 இல் தரப்பட்டிருக்கும் தரவுகளைப் பயன்படுத்திப் பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.


அட்டவணை 2 : இலங்கையில் மாகாண மற்றும் தேசியப் பாடசாலைகளில் ஆசிரியர்களின் எண்ணிக்கை மாகாண அடிப்படையில் – 2020

| மாகாணம் | மாகாணப் பாடசாலை ஆசிரியர்களின் எண்ணிக்கை | தேசியப் பாடசாலை ஆசிரியர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| மேற்கு | 35 745 | 10 934 |
| மத்திய | 29 939 | 5 128 |
| தெற்கு | 24 168 | 7 336 |
| வடக்கு | 16 767 | 1 957 |
| கிழக்கு | 20 154 | 3 851 |
| வட மேற்கு | 25 504 | 4 362 |
| வட மத்திய | 15 765 | 1 622 |
| ஊவா | 17 666 | 3 130 |
| சப்ரகமுவா | 22 248 | 3 758 |

மூலம்: இலங்கையின் வருடாந்தப் பாடசாலை தொகை மதிப்பு, 2020.

(i) அட்டவணை 2 இல் தரப்பட்டுள்ள தரவுகளை எடுத்துக்காட்டுவதற்கு இரட்டை பார் வரைபொன்றினை வரைக. (இதற்காக வழங்கப்பட்டுள்ள வரைபுத்தாளினை பயன்படுத்துக)

(08 புள்ளிகள்




தலைப்பு - 0.5 புள்ளி
மூலம் - 0.5 புள்ளி
X,y அச்சுக்கள் - 2.0 புள்ளி
தேசிய, மாகாண பார்கள் - 4.0 புள்ளி (இடைவெளி, நிறங்கள்)
குறியீட்டு விளக்கம் - 1.0
மொத்தம் - 8 புள்ளிகள்

(ii) உம்மால் வரையப்பட்ட வரைபினை அடிப்படையாகக் கொண்டு, இலங்கையின் மாகாண மற்றும் தேசியப் பாடசாலைகளில் உள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கைப் பரம்பலில் காணப்படும் நான்கு அம்சங்களைக் குறிப்பிடுக.

- மாகாணப் பாடசாலை ஆசிரியர்களின் எண்ணிக்கை தேசிய மட்டப் பாடசாலை ஆசிரியர்களின் எண்ணிக்கையை விட அதிகமாகக் காணப்படுகிறது.
- தேசிய மட்டப் பாடசாலை ஆசிரியர்களின் எண்ணிக்கை மேற்கு, தென் மாகாணங்களில் உயர்வாகக் காணப்படுகின்றது.
- மேற்கு மற்றும் மத்திய மாகாணங்களில் மாகாண மட்டத்திலான ஆசிரியர்களின் எண்ணிக்கை நடுத்தர மட்டத்தில் உள்ளது.
- வட மத்திய மாகாணத்தில் தேசிய மற்றும் மாகாணமட்ட ஆசிரியர்களின் எண்ணிக்கை குறைவாக இருக்கின்றது.
- பொதுவாக, எல்லா மாகாணங்களிலும் உள்ள மாகாண மட்ட ஆசிரியர்களின் எண்ணிக்கை தேசிய பாடசாலை ஆசிரியர்களின் எண்ணிக்கையை விட மூன்று மடங்கு உயர்வாக உள்ளது.

(04 புள்ளிகள்)

(iii) இரட்டை பார் வரைபு முறையின் மூன்று நன்மைகளைக் குறிப்பிடுக.

- வரைந்துகொள்வது இலகுவானது
- விளங்கிக்கொள்வது இலகுவானது
- இரண்டு மாறிகளையும் ஒன்றாக எடுத்துக்காட்டுவதற்கான திறனைக் கொண்டது
- இரண்டு மாறிகளையும் ஒப்பிட்டு நோக்குவதற்கான திறனைக் கொண்டுள்ளதுடன் மாற்றங்களையும் அவதானிக்க முடியும்.

(1 x 03 = 03 புள்ளிகள்))

* *

# THAVASI LEARNING CITY

YOUTUBE: THAVASI LEARNING CITY

Website: [www.tlcgeography.blogspot.com](http://www.tlcgeography.blogspot.com)